ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34.

ந.க.எண்.11650/2021/பி3, நாள்.29.09.2023

**பொருள்:** பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் – செல்வி.ர.ஜனனி, இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், மயிலாடுதுறை – பணிவரன்முறை ஆணை அனுப்புதல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை (4ப) எண்.01, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.19.09.2023

******

பார்வையில் காணும் அரசாணையில் இத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற்று மயிலாடுதுறை, உதவி ஆணையர் அலுவலகத்தில் 01.11.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் செல்வி.ர.ஜனனி, அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும், தனியருக்கு சார்வு செய்யும் பொருட்டும் பார்வையில் காணும் அரசாணை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு : பார்வையில் கண்டுள்ள அரசாணை.

ஒம்/–அ.சங்கர்
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)
ஆணையருக்காக

/உண்மைநகல்/உத்தரவுப்படி/ 3/10/23

கண்காணிப்பாளர்

3/10/2023

பெறுநர்

1. செல்வி.ர.ஜனனி, இளநிலை உதவியாளர்
   உதவி ஆணையர் அலுவலகம்,
   இந்து சமய அறநிலையத்துறை, மயிலாடுதுறை. (வரிசை எண்.2–ன் மூலம்)
2. உதவி ஆணையர்,
   இந்து சமய அறநிலையத்துறை,
   மயிலாடுதுறை. (இணைப்பு: அரசாணை) (பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும்)

## சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – செல்வி.ஆர்.ஜனனி, இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், மயிலாடுதுறை – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2-1) துறை

அரசாணை (4ப) எண்.01

நாள்: 19.09.2023
சோபகிருது, புரட்டாசி 2
திருவள்ளுவர் ஆண்டு-2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் செ.மு.ந.க. எண்.11650 / 2021 / பி3, நாள்.12.10.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.11650 / 2021 / பி.3, நாள்.30.08.2023.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், ஆணையர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த திருமதி.சி.பத்மாவதி அவர்கள் 04.12.2020 அன்று பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினார் எனவும், அன்னாரின் மகளான செல்வி.ஆர்.ஜனனி என்பவர் 11.08.2021 நாளிட்ட விண்ணபத்தின் மூலம் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரியிருந்தார் எனவும், மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆணையரது செயல்முறையில் மயிலாடுதுறை உதவி ஆணையர் அலுவலகத்தில் செல்வி.ஆர்.ஜனனி என்பவருக்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, 01.11.2021 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில்

சேர்ந்துள்ளார் எனவும், செல்வி.ஆர்.ஜனனி கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயதுத்தகுதி பெற்றிருந்தார் எனவும், அன்னார் கருணை அடிப்படையில் பணி வேண்டி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும், எனவே, செல்வி.ஆர்.ஜனனி என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 01.11.2021 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயற்குறிப்பினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, மயிலாடுதுறை உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் செல்வி.ஆர்.ஜனனி என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 01.11.2021 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை மனித வள மேலாண்மைத்துறையின் கடித எண்.3248/அ2/2023-1, நாள் 07.09.2023-ல் வெளியிடப்பட்டவாறு அத்துறையின் இசைவுபெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
✓செல்வி.ஆர்.ஜனனி, இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் அலுவலகம், மயிலாடுதுறை.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

நகல்:-
கருவூல கணக்கு அலுவலர், மயிலாடுதுறை.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 19/9/2023
பிரிவு அலுவலர்

19.9.23